தமிழ்நாடு அரசு

சுருக்கம்

நிலம் – கோயம்புத்தூர் மாவட்டம் – கோயம்புத்தூர் வடக்கு வட்டம் – விளாங்குறிச்சி கிராமம் – புல எண்.427 மற்றும் சிலவற்றில் 15.03 ஏக்கர் நிலம் – தகவல் தொழில்நுட்ப பூங்கா (IT Park) அமைக்க எல்காட் நிறுவனத்திற்கு உரிமை மாற்றம் செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

வருவாய்(நி.மு.5(2)) துறை

அரசாணை (நிலை) எண்.376 நாள் 11.8.2004

படிக்கவும்:

1) மாவட்ட வருவாய் அலுவலர், கோயம்புத்தூர் கடித எண். 53684/2003/ஆ4, நாள் 30.12.2003
2) மாவட்டாட்சியர் கோயம்புத்தூர் கடித எண்.53684/2003/ஆ4, நாள் 29.2.2004
3) சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் கடித எண். பி3/379/2004, நாள் 24.3.2004

***

ஆணை:

கோயம்புத்தூர் மாவட்டத்தில் தகவல் தொழில் நுட்ப பூங்கா அமைப்பதற்காக தகவல் தொழில்நுட்ப முன்னோடி நிறுவனமான திரு விப்ரோ கோவையில் தகவல் தொழில்நுட்ப வசதியை மேம்படுத்த 10 அல்லது 15 ஏக்கர் நிலத்தை குத்தகை அல்லது வாடகை அடிப்படையில் கேட்டுள்ளதென கோயம்புத்தூர் மாவட்டாட்சியர் (பொறுப்பு) அவர்கள் கூறியுள்ளார். மேற்படி நிலம் விமான நிலையத்திற்கு அருகிலும் ஏற்கனவே எல்காட் நிறுவனத்திற்கு ஒதுக்கப்படவுள்ள இடத்திற்கு அருகிலுமிருந்தால் மிகவும் வசதியாக இருக்கும் என்று விப்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். எனவே, ஏற்கனவே எல்காட் நிறுவனத்திற்கு தகவல் தொழில் நுட்ப பூங்கா அமைப்பதற்காக பரிந்துரைக்கப்பட்டுள்ள 14.05 ஏக்கர் நிலத்திற்கு அருகாமையில் புல எண்.427 இல் 7.23 ஏக்கர் மற்றும் புல எண்.436 இல் 7.80 ஏக்கர் ஆக மொத்தம் 15.03 ஏக்கர் கூடுதல் நிலத்தை எல்காட் நிறுவனத்திற்கு நில உரிமை மாற்றம்செய்வதன் மூலம் அந்நிறுவனம் விப்ரோ அல்லது பிற நிறுவனங்களுக்கு வாடகை அல்லது குத்தகை அடிப்படையில் நிலத்தை வழங்கஇயலும் என்று மாவட்ட வருவாய் அலுவலர் மேலும் தெரிவித்துள்ளார். உரிமை மாற்றம் குறித்து 25.9.2003 ஆம் நாளன்று அ1 விளம்பரம் பிரசுரம் செய்யப்பட்டதில் ஆட்சேபணை ஏதும் பெறப்படவில்லை; பிரஸ்தாப நிலம்கோவை மருத்துவக் கல்லூரிக்கு பாத்தியப்பட்டது; இந்நிலம் கோவை மாநகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ளது. மாநகராட்சியின் இசைவு கேட்கப்பட்டிருந்தும் அது பெறப்படவில்லை என்று மாவட்ட வருவாய் அலுவலர் கூறியுள்ளார். கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரியின் நிலம் என்பதால் மருத்துவக் கல்லூரி இயக்குநரின் இசைவு கேட்கப்பட்டும் அது பெறப்படவில்லை; புராதனச் சின்னங்களோ மத சம்பந்தமான தலங்களோ கட்டிடங்களோ ஏதும் இல்லை எனவும் அவர் கூறியுள்ளார். பத்திர எண்.2120/2003 இன்படி 0.55 ஏக்கர், 87சதுர அடி ரூ.15,10,000/– விற்பனை ஆகியுள்ளது என்றும், ஒரு சென்ட் நிலத்தின் மதிப்பு ரூ.27,443/– ஆகிறது என்றும், உரிமை மாற்றம் செய்ய உள்ள 15.03 ஏக்கர் நிலத்தின் மதிப்பு ரூ.4,12,46,829/– என்றும்,

254

வழிகாட்டிப் பதிவின்படியான மதிப்பு 1.4.2003 அன்று புல எண் 427–இல் சதுர அடிக்கு ரூ.30/– எனவும் புல எண் 436 இல் ஒரு சதுர அடி ரூ.45/– எனவும் அவர் தெரிவித்துள்ளார். எனவே, கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு வட்டம், விளாங்குறிச்சி கிராமம் புல எண் 427 இல் 7.23 ஏக்கர் மற்றும் புல எண்.436 இல் 7.80 ஏக்கர் ஆக மொத்தம் 15.03 ஏக்கர் நிலத்தினை மென்பொருள் பூங்கா அமைக்க எல்காட் நிறுவனத்திற்கு நிலக்கிரயம் செலுத்துவதன் பேரில் நில உரிமை மாற்றம் செய்யலாம் எனவும் அதன் மூலம் எல்காட் நிறுவனம் விப்ரோ அல்லது வேறு ஏதாவது நிறுவனத்திற்கு குத்தகைக்கோ அல்லது வாடகைக்கோ வழங்கலாம் எனவும் கோவை மாவட்டாட்சியர் பரிந்துரை செய்துள்ளார்.

2. கோயம்புத்தூர் மாவட்டாட்சியரின் அறிக்கையை ஆமோதித்து மேலனுப்பி, சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் தன்னுடைய அறிக்கையில், ஆவண எண்.2120/2003 நாள் 14.7.2003 இன்படி ஒரு செண்ட் ரூ.27,443/– என்றும் வழிகாட்டி மதிப்பு சதுர அடிக்கு ரூ.30/– மற்றும் ரூ.45/– ஆகிறது என்றும் இதன் அடிப்படையில் எல்காட் நிறுவனத்திற்கான முந்தைய பரிந்துரைப்படி ஒரு ஏக்கருக்கு ரூ.27,44,300/– ஆகிறது எனவும் தெரிவித்து பிரஸ்தாப நிலத்தை எல்காட் நிறுவனத்திற்கு உரிமை மாற்றம் செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளார். எனவே கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு வட்டம், விளாங்குறிச்சி கிராமம் புல எண்.427 இல் 7.23 ஏக்கர் மற்றும் புல எண்.436 இல் 7.80 ஏக்கர் ஆக மொத்தம் 15.03 ஏக்கர் நிலத்தினை கோயம்புத்தூர்மருத்துவக் கல்லூரியிடமிருந்து மீளப்பெற்று தொழில் நுட்ப பூங்கா அமைக்க எல்காட் நிறுவனத்திற்கு வருவாய் நிலை ஆணை எண்.24(6) இன் கீழ் வழக்கமான நிபந்தனைகளுக்குட்பட்டு உரிமை மாற்றம் செய்யலாம் என்று சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் பரிந்துரை செய்துள்ளார்.

3. கோயம்புத்தூர் மாவட்டாட்சியர் மற்றும் சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் ஆகியோர்களின் பரிந்துரைகளை அரசு நன்கு ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது.

அ) கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு வட்டம், விளாங்குறிச்சி கிராமம், புல எண்.427 இல் 7.23 ஏக்கர் மற்றும் புல எண்.436 இல் 7.80 ஏக்கர் ஆக மொத்தம் 15.03 ஏக்கர் கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி நிலத்தினை அக்கல்லூரியிடமிருந்து மீளப்பெற்று எல்காட் நிறுவனத்திற்கு தொழில நுட்ப பூங்கா அமைக்க ஒரு மடங்கு சந்தை மதிப்பு வசூலித்துக்கொண்டு வருவாய் நிலையாணை எண்.24 இன்கீழ் நில உரிமை மாற்றம் செய்யப்படுகிறது;

ஆ) உரிமை மாற்றம் செய்யப்படும் இந்நிலத்தினை தகவல் தொழில் நுட்பம்/தொழில்பூங்கா சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு குத்தகை அல்லது வாடகை அடிப்படையில் வழங்க எல்காட் நிறுவனத்திற்கு அனுமதி வழங்கப்படுகிறது;

(இ) இந்நில உரிமை மாற்றம் தொடர்பாக அரசு விதிக்கும் நிபந்தனைகளுக்கு கேட்பு நிறுவனம் உட்பட வேண்டும். எந்த நோக்கத்திற்காக உரிமை மாற்றம்செய்யப்படுகின்றதோ அவற்றிற்காக மட்டுமே நிலம் பயன்படுத்தப்பட வேண்டும்;

(ஈ) பிரஸ்தாப நிலமோ அல்லது அதன் ஒரு பகுதியோ தேவையில்லை எனில் அதை வருவாய்த்துறைக்கு ஒப்புவிக்க வேண்டும்;



...3.

4. மேலே பத்தி 3 இல் உள்ள ஆணைக்கேற்ப தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் மற்றும் சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் ஆகியோர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆர்.சத்பதி
அரசு செயலாளர்.

பெறுநர்

சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர், சென்னை–5
மாவட்டாட்சியர், கோயம்புத்தூர்
மேலாண் இயக்குநர், எல்காட் நிறுவனம், 692, அண்ணாசாலை, சென்னை–35
நகல்
தகவல் தொழில்நுட்பத் துறை/சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை/நிதித் துறை, சென்னை–9
வருவாய்(அநமு.3) துறை, சென்னை–9
இ.கோ/உதிரி நகல்.

/உண்மை நகல்/

பிரிவு அலுவலர்.